# ஜோதிடர்களின் சிறப்புக் கவனத்திற்கு

நீங்கள் ஜோதிடத்தில் கவனிக்க வேண்டியவை பல உண்டு. அந்த வகையில் நீங்கள் அடுத்துப் பார்ப்பது பொருத்தம் பார்த்தல். இந்த பொருத்தம் பார்ப்பது என்றாலே சங்கடப்படும் அளவிற்கு சில ஜோதிடர்கள் குழப்பி வைத்துள்ளார்கள். பலா் அவ்வாறு இல்லை. ஏன் இந்தக் குழப்பம் என்றால் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு வரும் நபர்களுக்கு ஜோதிடர் ஒரு தெளிவான முடிவைச் சொல்வார் என்ற நம்பிக்கையில் வருகின்றார்கள். அந்த நம்பிக்கைக்கு உள்ளவாறு ஜோதிடர்கள் செயல்படுவது அவசியம். எவ்வளவு பொருள் கொடுத்தார்கள். அதற்குத் தக்கவாறு சொல்லலாம் என்பது ஜோதிடம் அல்ல. இந்தத் துறை சந்தைப் பொருளும் அல்ல. பொருள் கொடுத்தாலும் குறைவாகக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் ஜாதகத்தை நன்கு கவனித்துப் பொருத்தம் பார்ப்பது அவசியம். அப்படிப் பார்க்கும்போது நட்சத்திர அடிப்படையில் பெயர் அமையவில்லை என்றால் வேறு பெயர் வைத்துள்ளார்கள் என்றால் அந்தப் பெயர் ஆதிக்கம்தான் அந்த நபருக்கு அதிகம் இருக்கும். அதை மனதில் கொள்வது அவசியம். முற்காலத்தில் நட்சத்திர அடிப்படையில் பெயர் வைத்தார்கள். ஆனால் இடைப்பட்ட காலத்திலும் தற்காலத்திலும் அவ்வாறு பின்பற்றப்படுவது இல்லை. தங்கள் மனவிருப்பத்தின் அடிப்படையில் பெயர் வைக்கின்றார்கள். ஆகவேதான் மேற்கண்டவாறு ஆய்வு செய்வதும் எண்கணிதப்படி பெயர் அமைத்தாலும் நட்சத்திர அடிப்படையில் உரிய எழுத்துக்களை பெயரின் முதல் எழுத்தாக வைப்பது அவசியம்.

## குழந்தை பிறந்த நேரபரிசோதனை

அடுத்து நாம் கவனிக்க வேண்டியது குழந்தை பிறந்ததாக கொடுக்கப்பட்ட நேரத்தின் அடிப்படையில் **ஜோதிடர்கள் நேர நிரணய கணக்கிட்டினைப் பயன்படுத்தி ஆய்வு செய்து குழந்தை பிறந்த உண்மையான நேரத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்** ஆய்வுக்குபின் கிடைக்கும் நேரத்திற்குதான் சாதகம் கணிக்க வேண்டும் **மருத்துவமனையிலோ, வீட்டில்லோ சுகப்பிரசவம் ஏற்படும் போது குறிக்கப்படும் நேரம் சரியான நேரமாக எடுத்துக்கொள்ள இயலாது**. குழந்தையின் பெற்றோர்கள் கொடுக்கும் நேரத்தைப் பரிசோதனை செய்யாமல் ஜாதகம் கணித்தால் அது போலி ஜாதகமாகத்தான் இருக்கும்.

குழந்தை பிறந்த நேரத்தினை பரிசோதனை செய்தால் 10 நிமிடம் முதல் 5.00 மணி நேரம் வரை குழந்தை பிறந்ததாக கொடுக்கப்பட்ட நேரம் குறையும்.

மேற்கண்ட முறையில் ஜாதகம் கணித்து எடுத்துக் கொண்டு அதன் மூலம் 10 பொருத்தத்தில் எத்தனை பொருத்தம் என்று கணித்தாகி விட்டது. இனி நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் ஒவ்வொரு ஜாதகத்திலும் எந்தெந்த பாவங்கள் வலிமை அடைந்துள்ளது எந்தெந்த பாவங்கள் வீழ்ச்சி அடைந்துள்ளது என்று அறிந்து கொள்வதும் மற்றும் கிரக நிலைகள் எவ்வாறு உள்ளது அவர்கள் நன்மை செய்வார்களா அல்லது தீமை செய்வார்களா என அறிந்து கொள்வதும் அவசியம் லக்கனம் எத்தனை டிகிரியில் அமைந்துள்ளது என கணிதம் செய்து அதிலிருந்து ஒவ்வொரு பாவத்தையும் கணக்கிடுவது அவசியம். அதன் அடிப்படையில் பாவங்களை

ஆய்வு செய்வது அவசியம். ராசிக்கட்டத்தை மட்டும் வைத்துக்கொண்டு பலன் பார்ப்பது முறையாகது. ஆயுள் பாவத்தினையும் கவனிக்க வேண்டும்

## செவ்வாய் தோஷம்

சரியான ஜாதகம் பார்த்துப் பொருத்தம் பார்த்து பாவங்களை வைத்துப் பார்த்து ஆய்வு செய்தபின் அடுத்ததாக செவ்வாய் தோஷம் பற்றி கவனிக்க வேண்டும். செவ்வாய் தோஷம் என்றால் சிலருக்கு பயமும் ஒரு கெடுதலான செய்தி என்றும் தோன்றும். ஆனால் உண்மையில் செவ்வாய் தோஷம் என்பது தீமையானதன்று. அது செவ்வாய் கிரகத்தை வைத்து ஒரு மனிதனின் ரத்த ஓட்டத்தையும் உடல் வலிமையையும் அறிந்து அதன் மூலம் ஒரு ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைப்பது. செவ்வாய் தோஷம் உள்ள ஆணிற்கு தோஷம் இல்லாத பெண்ணை திருமணம் செய்து வைத்தால் வலிமை குன்றிய பெண்ணை வலிமை உள்ள ஆணிற்குத் திருமணம் செய்வது போலாகும். அந்த ஆணையும், பெணையும் உடல் ரீதியாக பாதிக்கும். ஆகவேதான் நம் முன்னோர்கள் மிகவும் புத்திசாலித்தனமாக ஜாதகத்தின் மூலம் அறிந்து வலிமையான ஆணுக்கு வலிமையான பெண்ணைத் தேர்ந்து எடுத்தார்கள். இந்தக் காலம்போல் அப்போது ரத்தப் பரிசோதனைகள் இல்லாததால் பெண்ணை அதிகம் பார்த்துப் பேச முடியாததால் ஜாதகம் மூலம் அறிந்து செயல்பட்டார்கள்.

மேலும் செவ்வாய் தோஷம் இருந்தாலும் அந்த தோஷத்தின் தன்மையை ஆய்வு செய்ய வேண்டும். ஏனென்றால் செவ்வாய் சில லக்கணங்களுக்கு தோஷத்தை தருவ தில்லை மேஷம், கடகம், சிம்மம், விருச்சிகம், தனுசு, மீனம் இந்த ஆறு லக்கனத்தில் ஏதாவது ஒன்று லக்கணமாக அமைந்தால் செவ்வாய் தோஷம் பாதிப்பதில்லை ஆனால் சுக்கிரன் சனி ராகு கேது இந்த கிரகங்கள் மேற்படி லக்கணங்களுக்கு அதிகம் பாதிப்பைத் தரும். ஆகவே மேல் உள்ள லக்கணங்களுக்கு இந்த நான்கு கிரங்கள் அமைந்துள்ள இடத்தையும் தன்மைகளையும் ஆய்வு செய்வது நல்லது. மற்ற ரிஷபம் , மிதுனம், கன்னி, துலாம், மகரம், கும்பம் இந்த 6 லக்கணங்களுக்குத்தான் செவ்வாய் தோஷம் எப்படியென்று சற்று கவனிக்க வேண்டும். மேற்கண்ட லக்கணங்களில் ஒன்று லக்கனமாக அமைந்து பாவ நிர்மணம் செய்த பின் செவ்வாய் 2 4 7 8 12 ல் இருந்தால் தோஷமாகச் சொல்லாம். அவ்வாறு உள்ள செவ்வாய் மற்ற சுப கிரகங்கள் பார்வை சேர்க்கை பெறாமல் இருந்தாலும் செவ்வாய் பாதிக்கும்.

மேலும் செவ்வாய் ஆட்சி உச்சம் பெற்றாலும், அம்சத்தில் ஆட்சி பெற்றாலும்தான் செவ்வாய் ஆதிக்கம் உள்ளவர் என்று கூற முடியும். அந்த ஜாதகத்திற்கு அதற்குத் தக்கவாறு பெண் பார்க்க வேண்டும்.

அதேபோல் ராசிக் கட்டத்தில் ஆட்சியோ உச்சமோ பெற்ற செவ்வாய் அம்சத்தின் நீச்ச அடைந்தால் செவ்வாயின் பலம் குறைந்துவிடும். ஆகவே செவ்வாயின் பலத்தை நன்கு கவனிக்க வேண்டும். ஒரு கிரகம் நீச்ச வீட்டில் 10 சதமும் பகை வீட்டில் 30 சதமும் சம வீட்டில் 50 சதமும் அதேபோல் சம நட்பு வீட்டில் 75 சதமும் ஆட்சி வீட்டில் 100 சதமும் உச்ச வீட்டில் 125 சதமும் கணக்கிட்டு வலிமையை நிர்ணயம் செய்வது அவசியம். அதே போல் இந்தக் கணக்கீட்டில் அம்ச கட்டம் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும்.

இதிலிருந்து ஓர் உண்மை உங்களுக்கு விளங்கும். ஒவ்வொரு மனிதனின் உடல் பலம் கணிப்பதற்குத்தான் இந்த செவ்வாய் தோஷம் என்பதை அறியலாம்.உடல்

வலிமையுடைய ஆணிற்கு வலிமையில்லாத பெண்ணையும். உடல் வலிமையில்லாத ஆணுக்கு வலிமையுடைய பெண்ணையும் தேர்ந்தெடுக்கக்கூடாது என்பதற்கு இந்த முறை உதவியாக இருக்கும்.

செவ்வாய் தோஷமுடைய வலிமையான பெண்ணிற்கு செவ்வாய் தோஷம் இல்லாத வலிமை குன்றிய ஆணிடம் சிக்கி உடலாலும் திருப்தி அடையாமல் குழந்தைகளைப் பெற்று வளர்க்க முடியாமல் உழைத்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

## ஜோதிடர்கள் கூறும் பரிகாரங்கள்

சரி ஜோதிடர்கள் பரிகாரங்கள் கூறி அதை செய்து கொண்டுதான் உள்ளார்கள். ஜோதிடர்களில் இருவகை உண்டு ஒரு வகை ஆலய வழிபாட்டு முறைகளைப் பற்றிக் கூறி ஆலயங்களுக்குச் செல்லுங்கள் என்று கூறுவார்கள். அங்கு சென்றால் உங்களைப்போல் பலர் வந்து வேண்டுதல்களை நிறைவேற்ற வருவார்கள். அதன் மூலம் உங்கள் மகனுக்கோ மகளுக்கோ வரன் நேரும் அல்லது அவர்கள் மூலம் வரன் அமையும். மேலும் அங்கு சென்றால் மனச்சுத்தமும் உடல் சுத்தமும் உண்டாகும். பலரின் தொடர்புகள் கிட்டும் வெளியிடத்தில் உள்ளது போல் தீயவர்கள் ஆலயத்தில் இல்லையா என்றால் அதற்கு தான் தொடர்ந்து நீங்கள் அங்கு சென்று அவர்களில் நல்லவர்களை அறிந்துகொள்வீர்கள் அவர்களுடன் உங்கள் நட்பும் தொடரும்.

இன்னோர் வகை ஜோதிடர்கள் செலவு வைக்கும் ஜோதிடர்கள். இந்த முறை ஜோதிடத்தில் மட்டுமல்ல அனைத்துத் துறைகளிலும் உண்டு. இவர்கள் எந்த வீட்டில் திருமணம் செய்ய ஆயத்தமாக உள்ளார்கள் என்று தெரிந்து கொண்டு அவர்கள் வசதியானவர்கள் என்றால் அவர்களை அணுகி. ஆண் பெண்ணுக்கு செலவு செய்யக்கோரியும் அவர்களை வெளியூர் கோவில்களுக்கு அழைத்துச் சென்று பலவகை செலவுகளை செய்யக்கோரியும் செலவு வைப்பார்கள். மனத்தடுமாற்றத்திலும் திருமணம் நடக்கவில்லை என்ற வருத்தத்திலும் இருக்கும் தாய் தந்தையர்கள் உடன்பட்டு செலவு செய்வார்கள். அப்படிப்பட்ட ஜோதிடர்களை தவிர்ப்பது நல்லது.

இன்னும் சில வீடுகளில் ஜோதிடர் என்பவர் எல்லா வகையான பாதிப்புகளையும் தீர்ப்பவர் என்றும் ஒருமுறை ஜாதகத்தினைப் பாரத்தால் வாழ்க்கையில் ஏற்ப்படும் பலன்கள் முழுவதும் சொல்ல வேண்டும் என்கின்ற நிலையிலும் இருப்பார்கள் வாழ்க்கையில் மேலும் மேலும் பொன் பொருள் பெண்கள் ஆண்கள் கிடைத்துக்கொண்டே இருக்க விரும்புகின்றர்கள் தானும் தன்னைச்சார்ந்தவர்கள் மட்டும் நன்கு வாழ எண்ணுகின்றர்கள். இவர்கள் தான் செய்த தவறுகளை எல்லாம் காசைக் கொடுத்தோ தர்மம் செய்தோ ஜோதிடத்தின் மூலமாகவோ மந்திர தந்திர உதவியாலோ தீர்த்துவிடலாம் என்று எண்ணிகின்றர்கள். இப்படிப்பட்ட எண்ணம் கொண்டவர்களை போலியான ஜோதிடர்கள் மந்திரவாதிகள் உள்ளிட்டவர்கள் தன் சுய தேவைகளுக்குப் பயண்படுத்தி பொன் பொருள்களை சம்பாதிப்பதும் பெண்களை தவறான வழிகளில் கையாளுவதும் உண்டு ஒருசிலர் மரணத்தைக் கூட மாற்ற இயலும் என்று எண்ணுகின்றர்கள் அதற்காக பெரும் பொருள் செலவு செய்து முயற்சிக்கின்றர்கள். இவை எல்லாம் நடைமுறையில் சாத்தியப்படாதவை.

## காரணங்கள்

1) இயற்கை நிகழ்வுகளை மாற்றும் ஆற்றல் எவருக்கும் இல்லை.

2) தவறு செய்தவர்கள் தண்டனை அடைவது உறுதி.

3) ஒருவர் செய்த தவறுக்கு இன்னொருவரை பலியிடுவது தருமத்தில் நடக்காது.

4) ஜோதிடர்கள் உள்ளிட்டவர்கள் வழிகாட்டி மட்டும்தான் எல்லாம் தெரிந்தவர்கள் அல்ல எல்லா தீமைகளையும் மாற்றும் ஆற்றல் பெற்றவர்கள் அல்ல.

5) இயற்கைச் சக்திகள்தான் எல்லாச் செயலுக்கும் அடிப்படையானவை இந்த உலகில் வாழ்பவை அனைத்தம் இச்சக்திகளுக்குக் கட்டுப்பட்டவை

மக்கள் ஜோதிடன் செலவுகள் இல்லாதவன் என்றோ வயிறற்றவன் என்றோ எண்ணக்கூடாது ஒரு காரியத்திற்குக் ஜோதிடனை அழைத்தால் அதற்கேற்ற ஊதியம். உரிய பொருள் தந்து அனுப்ப வேண்டும். அதேபோல் ஜோதிடரும் இத்தனை ரூபாய் பொருள் கொடுத்தால்தான் பார்ப்பேன் என கூறக் கூடாது வறுமையில் உள்ளவர்களுக்கு எதையும் எதிர்பாராமல் வழிகாட்ட வேண்டும் இவ்வாறான செயல்கள் ஜோதிடரிடம் இருப்பது அவசியம்.

அடுத்து திசா சந்திப்பு உள்ளதா என்று பார்க்க வேண்டும். எப்படியென்றால் ஆண் பெண் ஜாதகத்தில் இருப்பு திசைகளின் காலம் முதல் தொடர்ந்துவரும் திசா காலத்தினை கூட்டி தற்போது எந்த கிரகத்தின் திசை நடப்பில் உள்ளது அந்த கிரகத்தின் திசை இன்னும் எத்தனை ஆண்டுகள் நடப்பில் இருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். அப்படி கணிக்கும்போது இருவரின் ஜாதகப்படி எத்தனை ஆண்டுகள் திசா சந்திப்பு இருக்கிறது என்பதை அறிந்து அந்த கிரகங்கள் எந்தக் கிரகத்தின் நட்சத்திரத்தில் உள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும். ஒரு சிலருக்கு தசா கிரகம் தன் நட்சத்திரத்தில் இருக்கும் அல்லது வேறு கிரக நட்சத்திரத்திலும் இருக்கும். இதையும் அறிய வேண்டும். ஏனென்றால் ஆண் பெண் இருவருக்கும் வெவ்வேறு திசைகள் நடந்து அவர்கள் இருவரும் ஒரு கிரகத்தின் நட்சத்திரத்தில் இருந்தால் அது திசா சந்திப்புத்தான். அதே போல் ஒரே கிரகத்தின் திசைகள் ஆண் பெண் இருவரின் ஜாதகப்படி நடந்தாலும் அந்த இரண்டு கிரகங்களும் வெவ்வேறு கிரகங்களின் சாரத்தில் இருந்தாலும் அது திசா சந்திப்பு இல்லை என்று அறிவது அவசியம்.

ஒருவாறு ஜாதகம் பார்த்து முடிந்து ஜாதகம் இல்லாவிட்டால் பெயர் பொருத்தம் சாமுத்திரிகா சாஸ்திரம் பார்த்தும் செய்யலாம் இந்த சாமுத்திரிகா சாஸ்திரத்தை முன்னோர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். மேலும் பொன் பொருள் நிலைகளை உங்கள் தன்மைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளுங்கள். பெண் நல்ல நிறமாக இருக்க வேண்டுமென்று ஆணும் பெற்றோர்களும் விரும்புவார்கள். ஆனால் இதில் நாளடைவில் ஆணுக்கு ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்படும். எனவே இந்த வகையான சிரமங்களைத தவிர்த்து மணமகளையோ மணமகனையோ தேர்ந்தெடுங்கள்.

## வாழ்வியல் பொருத்தங்கள் பத்து

நாம் பார்க்கும் 10 வகை வாழ்வியல் பொருத்தங்களின் அடிப்படைத் தன்மைகளை நீங்கள் அறிய வேண்டும் அவைகள் கீழ்கண்டவாறு பார்க்கவேண்டும்

**அ. குடிமைப் பொருத்தம்.** இந்தப் பொருத்தம் தாம் பிறந்த நாட்டின் பழக்க வழக்கம் தம் கடமை தாம் பிறந்த மண்ணின் பெருமைகளை காண்பது. பிறர் பழிக்காமல் வாழ்வது. அந்த இடத்தில் பின்பற்றப்படும் பழக்கம் தன் தாய் தந்தையின் மனதிற்கு சங்கடம் வராமல் இடையூறு தராமல் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது.

**ஆ. ஆண்மைப் பொருத்தம்** இந்தப் பொருத்தம் திருமண வாழ்வில் மிக முக்கியமானது. ஓர் ஆண்மகனுக்கு ஒரு பெண்ணை தாய்மை அடைய வைக்கும் அளவுக்கு ஆண்மை இருந்தால் மட்டும் போதாது அந்தப் பெண்ணை இல்வாழ்க்கையில் திருப்தி ஏற்படுத்தும் அளவுக்கு ஆண்மை இருக்க வேண்டும். அவ்வாறு உள்ளவன் தான் தன் மனைவியை குறைவில்லாமல் வைத்துக் கொள்வான். ஏவ்வளவு செல்வம் இருந்தாலும் அந்த இல்லத்தில் இன்பம் இல்லாமல் இருப்பது நல்லதில்லை என முன்னோர்கள் கூறுவர். எனவேதான் ஆண்மைப் பொருத்தத்திற்கு அவர்கள் அவ்வளவு முக்கியத்துவம் அளித்தனர். குறையிருந்தால் உரிய மருத்துவம் செய்து இல்வாழ்வில் ஈடுபடலாம்.

**இ. வயதுப் பொருத்தம்** பெண்ணின் வயதும் ஆணின் வயதும் 5 முதல் 10 வரை வித்தியாசம் இருக்கலாம் 15 முதல் அதிக வயது வித்தியாசம் உள்ள மணமக்களை இணைக்கக் கூடாது. அவ்வாறிருந்தால் பெண் ஆணைவிட அதிக காலம் தனிமையில் வாட நேரிடும்.

**ஈ. உருவப் பொருத்தம்** இது ஆண் பெண் நிறம் மற்றும் உடல் உயரம் பருமன் இவற்றில் இருவரின் நிலைகளை நன்கு கவனிக்க வேண்டும். ஆணைவிட பெண் சற்று உயரம் குறைவாக இருப்பது அவசியம். அதேபோல் இருவரின் உடல் பருமனையும் கவனிப்பது அவசியம்.

**உ. காமவாயில் பொருத்தம்** இது ஆண் பெண் இருவரின் உடல் இன்பத்தை நுகர்வதற்குரிய பொருத்தம் (உறுப்புகளின்) இருவரின் உறுப்புகள் உணர்வு சக்தி இருவரிடமும் சமமாக இருக்க வேண்டும்.

**ஊ. குடும்ப நிறைப் பொருத்தம்.** இந்தப் பொருத்தத்தின் அர்த்தம் என்னவென்றால் குடும்ப வாழ்வில் ஈடுபடும்போது பலவிதமான நல்ல கெட்ட செயல்கள் நடக்கும் அப்படி நடக்கும் செயல்களை தன் குடும்பத்திற்குள்ளேயே வைத்துக் காப்பதும் கணவன் மனைவி இருவருக்கும் நடைபெறும் நிறைகுறைகளை அடுத்தவரிடம் கூறாமல் தீர்வு காணும் ஆற்றல் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

**எ. ஆன்மீகப் பொருத்தம்** இருவரின் ஆன்மீகப் பொருத்தம் என்பது இருவரின் தர்ம சிந்தனையைக் குறிப்பதாகும் அனைவரிடமும் அன்புடன் நடந்து பொய் பேசும், மற்றவர்களை பழித்துப்பேசும் குணம் இல்லாமல். அருள் இல்லாதவனுக்கு அவ்வுலகம் இல்லை என்பதை மனதில் கொண்டு செயல்படுபவராக இருக்க வேண்டும்.மேலும் இருவரின் உணர்வுகள். செயல்கள் ஒத்துப்போக வேண்டும் இருவரின் மன உணர்வுகள் ஒத்துப்போக வேண்டும். குடும்ப வாழ்வு தடுமாறாமல் வாழ்வு அமைய வேண்டும். இருவரின் சிந்னைகளும் ஒரேமாதிரி இருக்க வேண்டும்.

**ஏ. செல்வப் பொருத்தம்** இந்தப் பொருத்தம் பொருளாதாரத்தைக் குறிப்பது திருமணத்தின்போது இதிலும் சற்று கவனம் செலுத்துவது நல்லது. அவசியச் செலவுகளை மட்டும் செய்ய வேண்டும். திருமணக் காலத்தில் அந்தஸ்து பார்த்து அதிகச் செலவுகளை செய்யக்கூடாது மாப்பிள்ளைவீட்டினர் வரன் பார்க்கும்போது வசதி அதிகம் பார்ப்பதால் திருமணம் செய்ய முடியாமல் உள்ள பெண்கள் பலர் உள்ளார்கள். அடிப்படை வசதியை விடுத்து செய்யப்படும் காதல் திருமணங்கள் சில நாற்களில் பணவசதி இல்லாத சூழ்நிலை ஏற்படும்போது உலக வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை செய்யுமளவிற்குப் போவது உண்டு.

ஆகவேதான் மேலே கண்டவாறு மனித வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொள்ளுங்கள் மேலும் ஆண்வர்க்கத்தில் ஏழு தலைமுறைக்கும் பெண்வர்க்கத்தில் ஐந்து தலைமுறைக்குள்ளும் பெண் எடுக்கக் கூடாது என்பது குறிப்பிடத்தக்கது

சரி மேற்படியான காரியங்கள் பார்த்தாகி விட்டது. இனி திருமணம் செய்ய வேண்டும். அதற்கு முதலில் மணமகன், மணமகள் இருவரின் பெயர் மற்றும் நட்சத்திரப்படி நாள் பார்க்க வேண்டும். முக்கியமாக மணமகளின் வீட்டு விலக்கு பற்றி கவனிக்க வேண்டும். இவ்வாறில்லாமல் திருமண மண்டப தேதிப்படியும் வேண்டிய உறவினர்களின் வருகை வசதிப்படியும் திருமண நாளை மாற்றி வைக்கக் கூடாது. அத்தகைய நிலை இருந்தால் திருமணத்தை எளிமையாக முடித்துவிட்டு வசதிக்கேற்ப திருமண வரவேற்பு விருந்து போன்ற நிகழ்ச்சிகளை வைத்துக் கொள்ளலாம்.

வரவேற்பு நிகழ்சி முடிந்து பெண் வீட்டில் முதலிவுக்கு ஏற்பாடு செய்தல்வேண்டும் அதற்கு தக்கவாறு மருத்துவ உதவி நல்ல உணவு, உடை சுத்தமான அறை தேர்ந்தெடுத்தல். நல்ல செய்திகளை கூறி அவர்களை நல்வழிப்படுத்துதல், பல அறிவுபூர்வ விஷயங்களை கூறி மணமக்களுக்கு உதவ வேண்டும். இது பிறக்கப்போகும் குழந்தைக்கும் நல்லது. அதுபோலவே குழந்தை பிறந்தபின் நல்ல கதைகள் கலைகள் இவற்றையும் போதிக்கலாம் இவ்வாறாக பெற்றோர்களின் பணி தொடர வேண்டும்.

## பல் வேறு வகைத்திறமைகள்.ஒருங்கினைந்த.குழந்தைகளை அடையும் முறைகள்

**இந்த உலகில் எல்லா இடங்களிலும் நன்மை தீமைகள் நிறைந்துள்ளன. நாம் நமக்கு நன்மையான காலத்தை தேர்வு செய்து, அந்த நேரத்தில் கூடுவது நல்லது. அவ்வாறு கூடும் நேரத்தில் நமக்குத் தேவையான தன்மையில் காலத்தைத் தேர்வு செய்யலாம். அதற்குத் தனியாக கணிதம் தேவை. அந்தக் காலத்தை கணித்து வைத்துக் கொண்டு அதற்கு தக்கவாறு செயல்பட்டு அதன் பயனைஅடையலாம். அவ்வாறு செயல்படும் தன்மைகள் பின்வருமாறு அமையும்.**

- **சூரியன்**

1) சூரியன் வலிமையடைந்த ஜாதகன் அரசனாகவும், அரசுத் துறை அதிகாரியாகவும் இருப்பார் அல்லது சிற்றூராட்சித் தலைவர் கிராமத்தலைவர் போன்ற பதவிகளை அடைவர். முன்கோபம் உள்ளவராக இருப்பார். எதிலும் தலைவராக இருக்க விரும்புவார். கோபகுணம் அதிகம்இருக்கும். சிவந்த கண்கள்

அமைந்திருக்கும். அரசியல் சட்டம் எரிபொருள்கள் தொடர்பான தொழில்கள் அமையும். மின்சாரம் தொடர்பான தொழில்கள் அமையும். முன்கோபம்போல் இரக்க குணமும் அதிகமாக இருக்கும். தன்னை நாடி வந்தவர்களை கைவிடமாட்டார். பலருக்கு உதவுவார். அதனால் தன் வாழ்க்கையில் சிரமங்களடைவார். கிரக வலிமை அடைந்தால் வாழ்க்கையில் அரிய பெரிய சாதனைகளை செய்து முடிப்பார்.சூரியன் ஆதிக்கம் அதிகம் உள்ள காலத்தில் இணைந்தால் அந்த ஜாதகன் அரசனாகவும், அரசு சார்ந்த உத்தியோகத்திலும் அமர்ந்து அதிகாரம் செலுத்துவார். மேலும் எரிபொருள் தொடர்பான தொழிலிலும் ஈடுபாடு இருக்கும். ஆதிக்கம் மேலோங்கி அதிகாரம் செலுத்துபவராக இருப்பார்.

2) **சூரியனுடன் சந்திரனும்** வலிமை அடைந்தால் அந்த ஜாதகன் அரசுத் துறையுடன். உணவுப்பொருள் வெளிநாட்டுத் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவார். மக்களின் மனநிலையை அறிந்து ஆட்சி செய்வார். அவர் மனதில் இரக்க குணம் நிறைந்து இருக்கும். கவிதை, காவியம், கலைகளில் ஈடுபாடு அதிகம் இருக்கும் கலைஞர்களை ஆதரிப்பார். தர்ம சிந்தனை அதிகம் உள்ளவராக இருப்பார். சந்திரன் தேய்பிறையாக அமைந்தால் மேற்கண்ட செயல்களைச் செய்வதன் மூலம் தன் வாழக்கைக்குக் தேவையானதைக் கூட வைத்துக் கொள்ளாமல் அவதிப்படுவார். வாழக்கையில் ஏற்றத் தாழ்வுகள் நேர்ந்து கொண்டே இருக்கும். ஆகவே வளர்பிறை சந்திரனாக இருக்கும் அமைப்பை தேர்வு செய்வது நல்லது.

3) **சூரியனுடன் செவ்வாய்** சேர்ந்திருந்தால் அவர் ராணுவம் காவல்துறைகளில் ஆதிக்கம் செலுத்துவார். நல்ல வலிமையா கிரகங்கள் அமைந்தால், ராணுவ ஆட்சியாளராக இருப்பார். தனது அதிகாரத்திற்குப் பணியாதவர்களை கொன்று குவிப்பார். வன்முறைகளை தனது கொள்கையாக வைத்திருப்பார். போர்க்குணம் நிறைந்திருக்கும் சர்வாதிகாரி என்று பெயர் எடுப்பார்.

4) **சூரியனும் புதனும்** வலிமை அடைந்தால் அவர் நல்ல நிர்வாகத்திறமையும், சமயம் அறிந்தும் செயலாற்றுவார். இந்த அமைப்பில் உள்ளவர்கள் மந்திரிகளாகவும் பெரும் கல்வி நிறுவனங்களை நடத்துபவராகவும், பத்திரிகைத் துறையில் ஈடுபாடு உள்ளவராகவும். தனது காரிய சாதனைக்காக எப்போதும் யாரிடமும் பணிந்து தனது காரியத்தை சாதித்துக் கொள்வார். அதே நேரத்தில் ஒருவரை வீழ்த்த வேண்டுமானால் அவரை விட வலிமையான நபரிடம் சென்று சேர்ந்து அவர் மூலமாக இவரை வீழ்த்தி விடுவார்.தொலைத் தொடர்பு சார்ந்த துறைகளிலும் ஈடுபாடு இருக்கும். அரசு தூதர்களாகவும், ஆலோசகர்களாகவும், பெரும் வணிகர்களாகவும் இருப்பார்கள். தேய்பிறைச் சந்திரனாக இருந்தால் மறைமுகத் தொழில் செய்வார். உலகமகா கிரிமினலாக இருப்பார். கடத்தல் உள்ளிட்ட கள்ள நோட்டு ஏமாற்று வியாபாரம் போலியான விளம்பரம் கொடுத்து ஏமாற்றுவது உள்பட இந்த மாதிரியான தொழிலில் ஈடுபடுவார்கள். இவற்றை தவிர்த்து வளர்பிறைச் சந்திரன், வளர்பிறை காலத்தில் (பிறந்தால்) இணைந்தால் சுபபலன்களை அடைவார்.

5) **சூரியனும், வியாழனும்** இணைந்தோ அல்லது வலிமையான காலத்தில் இணைந்தால் அவர் அரசுத் துறை சார்ந்த ஆன்மீகவாதியாக இருப்பார். நல்ல செயல்களைப் போதிப்பவராகவும் அரசுத் துறை சார்ந்த ஆன்மீகத்துறைலும் சிறந்து விளங்குவார்.சிறந்த ஆன்மீக நூல்களை இயற்றுவார். மேன்மையான கருத்துக்களைப் போதிப்பவராகவும் இருப்பார்கள் தேய்பிறை சந்திரனாக இருந்தால் போலி சாமியார்களாக இருப்பார்கள். கோவில் சிலைகளைத் திருடுவது கோவில்

சொத்துக்களை அபகரிப்பது ஆன்மீக வேஷம் போட்டு மக்களை ஏமாற்றுவது இவ்வாறான செயல்களை செய்வார். அத்தகைய செயல்களை தடுக்கவும், நன்மைகளைப் பெறவும் தேய்பிறை காலத்தை தவிர்த்து வளர்பிறை காலத்தை தேர்வு செய்து செயலாற்றுங்கள்.

6) **சூரியனும் சுக்கிரனும்** சேர்ந்து வலிமை அடைந்தால் அந்த ஜாதகன் அரசுத் துறையில் கலைப்பிரிவுகளில் ஈடுபடும் தொழில் மேற்கொள்வார். அரசுத் ஆடம்பரத் துறைகளிலும் ஆடை அலங்காரம், வீட்டை அழகுபடுத்துதல் கலை மேற்பார்வை ஆடல், பாடல், நாட்டியம் நாடகம் இவை சார்ந்த அரசுத் துறையில் ஈடுபாடு அதிகமாக இருக்கும். அரண்மனைகள் வடிவமைப்பாளர் மற்றும் அரசுத் துறை கட்டக்கலைஞர்களாக இருப்பார்கள். ஆடைகள் வடிவமைப்பாளர் மற்றும் அரசுத் கலைஞர்களாகவும் இருப்பார்கள். வளர்பிறை சந்திரனாக இருந்தால் தொடர்ந்து இந்தத் துறையில் மேலும் மேலும் வளர்ந்து வாழ்க்கையில் மேன்மை அடைவார். அல்லாமல் தேய்பிறை சந்திரனாக இருந்தால் வாழ்க்கையில் அடிக்கடி இடமாற்றம் மேற்கண்ட துறைகளில் ஈடுபட்டும் அதன் மூலம் உரிய வருமானம் இல்லாமலும் பெண்களிடம் பொருள்களை இழந்தும் வாழ்க்கையில் வீழ்ச்சி அடைவார். அவ்வாறு இல்லாமல் இருக்க, வளர்பிறை காலமாக பார்த்து செயல்படுதல் அவசியம்.

7) **சூரியனும் சனி** பகவானும் வலிமை அடைந்து சேர்ந்து இருந்தால், அரசுத்துறையில் பெரும் தலைமைப்பொறுப்பில் இருப்பார் மற்றும் அரசு சார்ந்த தொழிலகங்களிலும் வேலையிலும் இரும்பு சம்பந்தமான தொழில்களிலும் இருப்பார். அரசு வாகன தொழிற்சாலை ராணுவ தளவாடங்களை கையாளுவது, உதிரிப்பாகங்கள் தயாரித்தல், பழுது பார்த்தல் இவை தொடர்பான துறைகளில் சாதனை செய்வார்.

**தேய்பிறை சந்திரனாக** இருந்தால் அரசுக்கு எதிரான தீவிரவாதம். போர்க் குழுக்களுக்கு உதவி புரிதல் ஆயுத தளவாடங்களை சப்ளை செய்தல் தயாரித்தல் போன்றவற்றில் ஈடுபாடு இருக்கும்.

8) **சூரியனுடன் ராகுவும்** சேர்ந்தால் இரசாயனத்துறை விஷத்தன்மை உள்ள துறைகள் மற்றும் மருத்துவத்துறைகளில் ஈடுபாடும் புதிய ஆய்வுகள் புதிய செய்திகளை அறிதல் போன்றவையும் மேலோங்கும். இவ்வாறில்லாமல் தேய்பிறைச் சந்திரனாக இருந்தால் கள்ளம் கபடு திருட்டு மற்றும் சாராய வியாபாரம் தொடங்கி விலை உயர்த்த அபின் வரை கடத்தல் செய்வது. உள்ளிட்ட தொழில் செய்வது அரசுக்கு எதிராக போர்க்குழுவில் ஈடுபாடுகள் கொள்வது.போன்றவற்றில் ஈடுபடுவார்

**சூரியனுடன் கேது** சேர்ந்து வலிமை அடைந்தால் அரசு சார்ந்த ஆன்மீக வாதியாக இருப்பார்கள் மற்றும் அரசுக்கு ஆலோசனைகள் வழங்குவது அரசு கட்டுப்பாட்டில் உள்ள கோவில் நிர்வாகம் செய்தல் அரசு சார்ந்த ஆன்மீகக் கல்வி நிறுவனத்தை நிர்வகிப்பது உள்நாடு வெளிநாடுகளில் ஆன்மீக பணிகளைப் பரப்புவது மற்றும் ஆங்காங்கு கிளை ஆசிரமங்களை அமைத்து மக்களுக்குப் புரியும் வகையில் சொற்பொழிவுகளை நிகழ்த்துவது இப்படிப் பல வகையான செயல்களைப் பின்பற்றிய வாழ்க்கை அமையும். தனக்கு என்று எந்தவிதமான சொத்தையும் வைத்துக்கொள்ளாமல் பொது சேவையில் ஈடுபடுவார்.

**சந்திரன்**

மனதிற்கும் உடலுக்கும் அதிபதியான சந்திரன் வலிமையாக ஜாதகம் அமைந்தால் அந்த ஜாதகன் மனத்திடம் உள்ளவராகவும். உடல் வலிமை உள்ளவராகவும் இருப்பார். கவிதை, கட்டுரை, நாடகம், கதை மனோதத்துவம், கடல் பயணம், கடல் கடந்த வாணிபம், கடல் ஆய்வு. மனித உடல் பற்றிய ஆய்வுகள் உணவு விடுதி. உணவுப்பொருள்கள் தொடர்பான துறைகளில் ஈடுபாடு உள்ளவராக இருப்பார். வலிமை குறைவாக இருந்தாலும் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்களான காய்கறிகள் போன்ற பொருள்கள் விற்பார். அல்லது உணவுப் பொருள்கள் விற்பனை செய்வது அல்லது தயாரிப்பு போன்ற துறைகளில் ஈடுபாடு உள்ளவராக இருப்பார்.

**சூரியனும் -சந்திரனும்** இணைந்து வலிமை அடைந்தால அரசு கவிஞர், அரசு உணவு விடுதியாளர்கள் நாட்டியக் கலைஞர்கள் வெளிநாட்டுத் தூதரக பணிகளிலும் எரிபொருள் எண்ணெய் வளம் தொடர்பான துறைகளிலும் ஈடுபாடு உள்ளவராக இருப்பார்கள்.

**சந்திரனும் செவ்வாயும்** இணைந்து வலிமை அடைந்தால், அந்த ஜாதகன் பரந்த நிலங்களை கொண்டவராகவும், பல இடங்களில் பூமி மற்றும் தொழில்கள் உள்ளவராகவும் இருப்பார். கப்பல் உரிமையாளர் மற்றும் கேப்டன் மற்றும் கப்பல் படை போன்ற துறைகளில் ஈடுபாடும். போக்குவரத்துத்துறையில் பணியாற்றுபவர்களாகவும் இருப்பார்கள்.

**சந்திரனும் புதனும்** சேர்ந்து வலிமை அடைந்தால், அந்த ஜாதகன் பத்திரிகைத் துறை மற்றும் உணவுத்துறை. ஹோட்டல், திரையரங்கம், உணவு ஏஜென்ஸி, காய்கறிவகைத் துறையிலும் ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள்.

**சந்திரனும் வியாழனும்** சேர்ந்து வலிமை அடைந்தால், அந்த ஜாதகன் பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இருப்பார். சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தில் இருப்பார். சமய போதனையாளராகவும் சமுதாயத் தலைவராகவும் வங்கி மற்றும் நகைக்கடை தொடர்புள்ள தொழில்களும் அமையும் ஆன்மீகப் பணியிலும் ஈடுபாடு இருக்கும்.

**சந்திரனும், சுக்கிரனும்.** சேர்ந்து வலிமை அடைந்து இருந்தால், அந்த ஜாதகம் வாகனத்துறை ஆடம்பரமான இடங்களுக்கு சொந்தக்காரன் சினிமா, நாடகம், போட்டோ எடிட்டர் துறைகளில் வீடியோ போன்ற துறைகளில் மற்றும் ஜவுளி துறை தொடர்பான துறைகளிலும் ஈடுபாடு உள்ளவராக இருப்பார்கள்.

**சந்திரனும்-சனியும்** சேர்ந்திருந்தால், அந்த ஜாதகன் எந்திரங்கள் உற்பத்திசெய்பவராகவும் பெரும் உழைப்பாளியாகவும் செவைசெய்பவராகவும்இருப்பார்

**சந்திரனும், ராகுவும்** சேர்ந்தால், மென்மையான துறையில் உழைப்பாளியாக இருப்பார்கள். சந்திரனும் ராகுவும் சேர்ந்து இருந்தால் மருத்துவத்துறை மனநோயாளிகள் காப்பகம் மனோதத்துவம் மருத்துவம் போன்ற துறைகள் மற்றும் இரசாயனத்துறை எரிசாராயம் போதை தரும் துறைகளில் தொழில் அமையும்.

**சந்திரனும். கேதுவும்** சேர்ந்திருந்தால், அந்த ஜாதகன் தத்துவங்களை போதிக்கும் ஞானியாகவும், ஆன்மீக சொற்பொழிவாளர்களாவும் இருப்பார்கள்.

- **செவ்வாய்**

செவ்வாய் வலிமை அடைந்த ஜாதகன் போர் குணம் படைத்தவனாகவும், அரசியல் வாதியாகவும் சட்டத் துறை மருத்துவத்துறையில் அறுவை சிகிச்சை தொடர்பான தொழில ராணுவம் காவல் துறைபோன்றதுறைகளில் ஆதிக்கம் செலுத்துவார். மேலும் பூமிக்கதிபதியாகவும், ரத்த சம்பந்தமான அறுவை சிகிச்சை நிபுணராகவும் இருப்பார்கள். கனரக வாகனம் அல்லது கல் சமபந்தமான தொழில்களில் மேன்மை அடைவார்கள். மோசமான கிரக நிலை உள்ளவர்கள் கொலையாளியாகயாக குற்றவாளியாகவும், இருப்பார்கள். தேய்பிறையில் பிறந்தால் சுபகிரக பார்வை இல்லாமல் இருந்தால் அதாவது மறைமுகமாக தனது காரியத்தை சாதித்துக் கொள்வார்.

**செவ்வாயும் சூரியனும்** வலிமையடைந்து சேர்ந்து இருந்தால், அந்த ஜாதகம் அரசியல் எரிபொருள் தொடர்பான துறையிலும் அரசு அதிகாரியாகவும் இருப்பார்கள். ராணுவத் தளவாடங்கள் தயாரிப்பு. ஏவுகணைகள் தயாரிப்பு இவற்றில் ஈடுபாடு இருக்கும்.

**செவ்வாயும் சந்திரனும்** சேர்ந்தால் (முன் பகுதியில் உள்ளதைப் பின்பற்றவும்)

**செவ்வாயும் புதனும்** சேர்ந்து வலிமை அடைந்தால், அந்த ஜாதகன் அரசியல் சட்டம் தகவல் தொடர்பு போன்ற துறைகளிலும் பயிற்சித் துறையிலும் ஈடுபாடு உள்ளவராக இருப்பார் மற்றும் விமானத்துறையிலும் ஈடுபாடு இருக்கும்.

**செவ்வாயும் வியாழனும்** சேர்ந்து வலிமை அடைந்தால், அரசனுக்கு மேன்மையான பதவிகளை அடைவார்கள். தற்போதைய கவர்னர் ஜனாதிபதி பொருளாதார நிபுணர் திட்டக் கமிஷன் புதிய சட்டம் இயற்றுதல் விசாரணை கமிஷன் தலைவராக இருத்தல், பூமிக்கதிபதி மற்றும் கிராமப்பகுதியில் செல்வாக்குள்ளவராக இருப்பார்.

**செவ்வாயும் சுக்கிரனும்** சேர்ந்து வலிமை அடைந்தால் அந்த ஜாதகன் கனரக வாகனங்கள் பெரும் தொழிற்சாலைகள் ஜவுளி உற்பத்தி ஆலைகள் இவற்றில் ஈடுபாடு உள்ளவராகவும் செல்வாக்குமிக்கவராகவும் இருப்பார்கள்.

**செவ்வாயும் ராகுவும்** சேர்ந்து வலிமை அடைந்தால் கள்ளம் கபடு கொள்ளை கொலை செய்பவராக இருப்பார்கள். சுபகிரக பார்வை இருந்தால் வக்கீல்.டாக்டர்.காவல் துறையில் இருப்பார்கள். அல்லது விலங்குகளை அடித்துக் கொல்லும் தொழில் போன்றதுறைகளிலும். மரம் வெட்டியாகவும் இருப்பார்கள்.

**செவ்வாயும் கேதுவும்** சேர்ந்து வலிமை அடைந்திருந்தால் அந்த ஜாதகம் ராணுவம் சட்டம் காவல் துறை பயிற்சித் துறை அரசுத்துறையில் மனப்பயிற்சிகளை வழங்குபவராக இருப்பார்கள்.

- **புதனின்**

**புதனின்** ஆதிக்கம் உள்ள ஜாதகம் கல்வித்துறையில் பணிகள் செய்பவர்களாக இருப்பார்கள். பத்திரிகைத் துறை மற்றும் தகவல் தொடர்பு. மந்திரிகள் வெளிநாட்டு தூதர்கள் அரசு சார்பு கல்வி நிறுவனங்களில் பதவி. சொந்த கல்வி நிறுவனம் நடத்துதல்.கல்வி சம்பந்தமான ஆய்வுகள். கவிதை - கட்டுரைகள் எழுதுவது கணக்காளர்கள் ஏஜெண்டுகள் பதிப்பகத்தார் - பத்திரிகை விற்பனை டெலிபோன். டி.வி. கம்ப்யூட்டர், செல்போன் போன்ற துறைகளில் பணி அன்றாடம் விற்பனை செய்யும் கமிஷன் மண்டி சந்தை புரோக்கர்கள் ஆசிரியர்கள் பேராசிரியர்கள் போன்ற துறை

இவைசார்ந்த துறைகளில் ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள். ஆதிக்கம் அதிகம் உள்ளவர்கள் உலக அளவில் தூதர்கள் சமாதானத் தூதுவர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் தகவல் தொடர்பு டெலிபோன் துறை சார்ந்தவை பெரும் தொழில் ஏஜெண்டுகள் காண்ட்ராக்டர்கள் ஒப்பந்தப் பணிகளை செய்பவர்கள் மற்றும் மேற்கண்ட துறைகளில் ஆலோசகர்கள் போன்ற துறைகளில் ஈடுபாடு இருக்கும்.

**புதனும்.. சூரியனும் முன்பகுதி**

**புதனும் சந்திரனும்முன்பகுதி**

**புதனும்.. செவ்வாயும் முன்பகுதி**

**புதனும் வியாழனும்** இணைந்து வலிமை அடைந்தால், அந்த ஜாதகன் பல கல்வி நிறுவனங்களை நிர்வகிப்பார் பல்கலைக்கழகம் கல்லூரிகள் போன்றவை அரசு வெளியிடும் (பணம்) நோட்டு அச்சடிப்பது மற்றும் பெரும் வாணிபம் செய்பவராக இருப்பார்கள். அல்லது இவை தொடர்புள்ள துறைகளில் ஈடுபாடு இருக்கும்.

**புதனும் சுக்கிரனும்** இணைந்து வலிமை அடைந்தால், அந்த ஜாதகன் சினிமா நாடகம் மற்றும் பத்திரிகை துறையில் கதையாசிரியராக இருப்பார்கள். ஆபரணங்கள் ஜவுளித்துறைகளிலும் ஈடுபாடு உள்ளவராக இருப்பார்கள்.

**புதனும் சனியும்** இணைந்து வலிமை அடைந்தால் இந்க ஜாதகன் பத்திரிகை விற்பனையாளர்கள் பழைய பத்திரிகை வாங்குபவர்கள் மற்றும் ஏஜெண்டுகள் போன்ற துறையிலும் பழமையான பொருள்கள் சேமிப்பது மற்றும் பழைய பொருள்கள் வாங்கி விற்பது போன்ற தொழில்களும் செய்வார்கள்.

**புதனும் ராகுவும்** சேர்ந்து வலிமை அடைந்தால், அந்த ஜாதகருக்கு மருந்து கம்பெனி டாக்டர் மருத்துவத் துறை இரசானத் துறை மது வகைகள் மற்றும் இவை சார்ந்த துறைகளில் தொழில்கள் அமையும்.

**புதனும் கேதுவும்** இணைந்து வலிமை அடைந்த ஜாதகன் ஆன்மீகவாதிகள் போதகர்கள் பாடகர்கள் கோவில் பூசாரிகள் மற்றும் அறநிலையத் துறையில் பணியாளர்கள் போன்றவர்களாக இருப்பார்கள்.

- **வியாழன்**

வியாழன் வலிமை அடைந்த ஜாதகன் பொன், பொருள் நிறைந்தவராக இருப்பார். போதனை செய்வார் ஆன்மீகம் குணம் நிறைந்து இருக்கும். சமுதாயத்தில் நல்ல அந்தஸ்து அடைவார் நாட்டுக்கு நாடு சமாதானம் செய்பவர் நீதிபதிகள், சாஸ்திர ஆய்வு ஆன்மீக ஆய்வு. பொருளாதார நிபுணர். வங்கித்துறை, நகைக்கடை பொன் வேலை செய்பவர், தங்கத்திலும் அதன் கலப்பிலும் சிலை வடிப்பவர், தர ஆய்வாளர், சாஸ்திர அறிவு ஆலயத் தலைமை பதவி. அறநிலையத்துறை சார்ந்த பதவிகள் போன்றவற்றை அடைவர் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பர் கொள்கைப் பிடிப்பும் உள்ளவர். பொது வாழ்க்கையில் ஈடுபாடு உள்ளவர். வலிமையான நிலையில் இருந்தால் அந்த ஜாதகன்ஏராளமான பொன், பொருளும் நிறைந்தவர் சமுதாத்தில் உயர்

பதவிகளும் கவுரவ பதவிகள் அவருக்கு கிடைக்கும். மத போதகன் மட அதிபதிகள் போன்ற துறைகளிலும் ஈடுபாடு இருக்கும்.

**வியாழனும் சூரியனும்** இணைந்து வலிமையடைந்த ஜாதகன் (முன்பகுதி)

**வியாழனும் சந்திரனும்** (முன்பகுதி) காண்க

**வியாழனும் செவ்வாயும்** (முன் பகுதி) .......

**வியாழனும் புதனும்** (முன் பகுதி) .......

**வியாழனும் சுக்கிரனும்** இணைந்து வலிமை அடைந்த ஜாதகன் ஆடம்பரம் நிறைந்த துறைகளில் தலைமைப் பதவிகளை அடைவார். திரைப்படத்துறையில் ஆன்மீகம் பற்றிய திரைப்படம், ஆன்மீகக்கல்வி சிற்பக் கலை, கட்டக்கலை, அலங்காரப் பொருள்கள் தயாரிப்பது விற்பனை செய்வது கோவில் அர்ச்சகர்கள் வங்கி மேலாளர்கள் போன்ற துறைகளில் ஈடுபாடு உள்ளவர்களாகவும் இவை சார்ந்த துறைகளில் ஈடுபாடு உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**வியாழனும் சனியும்** இணைந்து வலிமை அடைந்தால் அந்த ஜாதகன் தொழில் கல்வி தொடர்பான துறையில் ஈடுபாடு உள்ளவராக இருப்பார். இயந்திரம் தொடர்பான கல்விகளை போதிப்பவர் மற்றும் இரும்பு தொடர்பான துறை பழைய இரும்பு வியாபாரம் போன்றவற்றில் ஈடுபாடு அல்லது வாகனங்களுக்கு நிதியுதவி செய்பவராகவும் இவைகள் சார்ந்த துறையில் ஈடுபாடும் உள்ளவராகவும் இருப்பார்.

**வியாழனும் ராகுவும்** இணைந்து வலிமையடைந்தால், அவர் மருத்துவத்துறையில் ஈடுபாடும், அந்தத் துறையில் மேற்படிப்பு ஆய்வு புதிய கண்டுபிடிப்புகள் மருத்துவக் கல்வியை போதிப்பது போன்ற துறைகளில் ஈடுபாடும் ஆயுதப் பயிற்சி வெடிமருந்துகள் போன்ற துறைகளிலும் ஈடுபாடு உள்ளவராகவும் இருப்பார்.

**வியாழனும் கேதுவும்** சேர்ந்து இருந்தால் ஆன்மீக துறையில் ஈடுபாடு உள்ளவராக அந்தத்துறையில் இருப்பார் அல்லது பொதுச் சேவை செய்பவராக இருப்பார். மற்றும் இவை சார்ந்த துறையில் ஈடுபாடு உள்ளவராக இருப்பார்கள்.

- **சுக்கிரன்**

ஒரு ஜாதகத்தில் சுக்கிரன் வலிமை அடைந்தால் அந்த ஜாதகன் நல்ல சுகபோக வாழ்க்கை அடைவார். கார். பங்களா பெண் சுகம் ஆகியவை எளிதில் கிடைக்கும். மேலும் நாடகத்துறை டி.வி. சினிமா துறைகளில் ஈடுபாடு, ஜவுளி மற்றும் ஆடம்பரப் பொருள்கள் தொடர்பான துறைகளில் பதவி சொந்தமாக தொழிற்சாலை வைத்தல். கட்டத்துறை அல்லது அவை சார்ந்த பொருள்கள் விற்பனை செய்தல். நாட்டியம் சங்கீதம் சார்ந்த துறைகள் ஆடம்பரமான வாகனங்கள் இயக்குதல் அவை சொந்தமாக இருப்பது.சினிமா தியேட்டர், ஆடம்பரமான ஹோட்டல் இவை தொடர்பான தொழில்கள் போன்றதுறைகளில் ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள்

**சுக்கிரனும் சூரியனும்** சேர்ந்து வலிமை அடைந்தால் அந்த ஜாதகன்
சூ சு. பகுதி காண்க

**சுக்கிரனும் சந்திரனும்** சேர்ந்து வலிமை அடைந்த ஜாதகன்

சந் சு. பகுதி காண்க

**சுக்கிரனும் செவ்வாயும்** சேர்ந்து வலிமை அடைந்த ஜாதகன்

செ சு. பகுதி காண்க

**சுக்கிரனும் புதனும்** சேர்ந்து வலிமை அடைந்தால் அந்த ஜாதகன்

செ பு. பகுதி காண்க

**சுக்கிரனும் வியாழனும்** சேர்ந்து வலிமை அடைந்தால் அந்த ஜாதகன்

வி சு. பகுதி காண்க

**சுக்கிரனும் சனியும்** சேர்ந்து வலிமையடைந்த ஜாதகன் லாரி. பஸ் மற்றும் விமானம் எந்திரத்துறைகளில் ஜவுளித் தொழில் ஆடம்பரமான எந்திரங்களின் தயாரிப்பு போன்ற துறைகளிலும் ஆடை ஆபரணத் துறையில் வடிவமைப்புத்தொழில் அடிமைத் தொழில் இவை சார்ந்த துறைகளில் ஈடுபாடு இருக்கும்.

**சுக்கிரனும் ராகுவும்** சேர்ந்து வலிமையடைந்த ஜாதகன் காலைத்துறையில் ஈடுபாடு அளவுக்கு அதிகமாக இச்சை போகம் பொய் பேசுதல் போன்றவை மூலம் பொன், பொருள் சேர்ந்தால். கொலை, கொள்ளை இசைகள் முலம் பொருள் சேர்ந்தால் மறைமுக வழிகளில் பணம் சம்பாதிப்பது. உலகில் உள்ள அனைத்து இன்பங்களையும் அனுபவிக்க முயலுதல் அதன் மூலம் பாதிப்படைந்து மறைவதுபோன்றவைஏற்ப்படும் சுபகிரஹ பார்வை இருந்தால் இந்த பலன்கள் சுபத்தன்மை பெறும், வசதியான இடத்தில் ஆடம்பர வாழ்வை அனுபவிப்பாகள்.

**சுக்கிரனும் கேதுவும்** சேர்ந்து வலிமை அடைந்தால் அந்த ஜாதகனுக்கு ஆன்மீகம் தொடர்பான நாடகம், கவிதை, கட்டுரை, சினிமா, டி.வி, தொடர்களை தயாரிப்பார். அல்லது ஆன்மீகம் தொடர்பான பொருள்கள் தயாரிப்பது, சிற்பக்கலை நாட்டியக்கலை இவை பற்றிய போதனைகள் செய்வது அல்லது இவை தொடர்பான துறைகளில் ஈடுபாடு உள்ளவராக இருப்பார்கள்.

- **சனி**

சனி பகவான ஒருவர் ஜாதகத்தில் வலிமை அடைந்தால் அவர் நல்ல உழைப்பாளியாக இருப்பார். தினக்கூலியாக தனது வாழ்க்கையைத் தொடங்கும் இவர் முதலில் அதிகம் கஷ்டப்படுவார். ஆனால் உழைப்பின் மூலம் உயர்ந்து பிற்காலத்தில் பெரும் தொழில் அதிபராக வருவார். எந்திரத்துறையிலும் ஈடுபாடு இருக்கும். எத்தனை தான் பொருள் இருந்தாலும் தான் மட்டும் உழைக்கும் எண்ணம் கொண்டவர். வாழ்க்கையில் இவர் வாழ்ந்த காலம் மற்றவர்களுக்கு நல்ல மேன்மையைக் கொடுப்பார் பல நண்பர்கள் மேன்மை அடைய வழிகாட்டியாக இருப்பார். பொதுவாக செயலாற்றுபவராக இருந்தாலும் தான் எண்ணிய செயல்களை செய்து முடிப்பார்.

**சனியும்- சூரியனும்** சேர்ந்து வலிமை அடைந்தால் அந்த ஜாதகன். சூ-சனிபகுதி.காண்க

**சனியும்- சந்திரனும்** சந்-கேது. பகுதி காண்க

**சனி- செவ்வாயும்** இணைந்தால் செ-சனி.பகுதி. காண்க

**சனியும்- புதனும்** இணைந்தால் புதனும்-சனியும் பகுதி காண்க

**சனியும்- வியாழனும்**.சேர்ந்துவலிமையடைந்தால். அந்த ஜாதகன் வியாழனும்-சனியும் பகுதி காண்க

**சனியும். சுக்கிரனும்** சேர்ந்து வலிமையடைந்தால் அந்த ஜாதகன் சுக்கிரன் சனியும் பகுதி. காண்க

**சனியும்-ராகுவும்** சேர்ந்து வலிமையடைந்தால் அந்த ஜாதகன் அடிமைத்தொழில் மருத்துவத்துறை மற்றும் போதைப் பொருள்கள் தொடர்பான துறைகளில் ஈடுபாடு உள்ளவராக இருப்பார். மற்றும் மறைமுகத் தொழில்களில் ஈடுபாடும் அரசுக்கு எதிராக

செயல்படுதல்.போன்ற செயல்களில் ஈடுபாடும் இருக்கும்.

**சனியும்-கேதுவும்** சேர்ந்து வலிமையடைந்தால் அந்த ஜாதகன் ஆன்மீகம் தொடர்பான துறைகள் மற்றும் பொதுச் சேவை செய்தல் போன்ற துறைகளில் அடிமைத் தொழில் புரிபவராக இருப்பார் அல்லது கோவில் கல்வி நிறுவனங்களில் அடிமை வேலைகள் செய்பவராக இருப்பார்.

- ராகு

ஒருவர் ஜாதகத்தில் ராகு வலிமை அடைந்தால் அந்த ஜாதகன் மருத்துவத்துறையிலும் இரசாயன சம்பந்தமாகவும். தொடர்புள்ள துறைகளில் ஈடுபாடு இருக்கும். மேலும் களவு, திருட்டு. பொய் பேசுதல், போதைப் பொருள் தொடர்பு அரசாங்கத்தையும் மக்களையும் ஏமாற்றும் தொழில் இவைகள் தொடர்புள்ள துறைகளில் ஜாதகனுக்கு ஈடுபாடு இருக்கும். தீயவர்கள் தொடர்பும் அதன் மூலம் வருமானமும் அடைவார். அதே நேரத்தில் அரசு தண்டனையும் அடையும் யோகமும் உண்டு சுபகிரஹ பார்வை இருந்தால் மேற்கண்ட துறையின் மூலம் நன்மை அடைவார்.

**ராகுவும்- சூரியனும்** சேர்ந்து வலிமையடைந்தால் அந்த ஜாதகன் சூரியனும்-ராகுவும் பகுதி காண்க
**ராகுவும்- சந்திரனும்** சேர்ந்து வலிமையடைந்த ஜாதகன் சந்திரனும்-ராகும் பகுதி காண்க
**ராகுவும்- செவ்வாயும்** சேர்ந்து வலிமையடைந்தால் அந்த ஜாதகன் செவ்வாயும்-ராகுவும் பகுதி காண்க
**ராகுவும்- கேதுவும்** எப்பொழுதும் இணையமாட்டார்கள். ஒருவருக்கு ஒருவர் 180 டிகிரியில் தான் எப்போதும் இருப்பார்கள்.

- **கேது**

ஒருவர் ஜாதகத்தில் கேது வலிமை அடைந்தால் அந்த ஜாதகன் ஆன்மீக வாழ்க்கை வாழ்பவராக இருப்பார். அல்லது பொது வாழக்கையில் ஈடுபாடு இருக்கும். இல்வாழ்க்கையில் இருந்தாலும் குடும்பத்தில் ஈடுபாடு இல்லாதவராகத்தான் இருப்பார். சிலர் குடும்பத்தை விட்டுப் பிரிந்து ஆன்மீகம் மற்றும் பொது வாழ்வில் ஈடுபாடு கொள்வார்கள். ஆன்மீக சொற்பொழிவாளர்கள் மற்றும் ஆலய சேவகம் ஆன்மீக பத்திகை பதிப்பகம் போன்ற துறைகளில் ஈடுபாடும் சாமியார்களாக இருப்பது இப்படிப்பட்ட வாழ்க்கையும் அமையும்.

சுபம்